தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 ஏப்ரல் 27

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. ஒழுங்குப் பிரச்னை.

உறுப்பினர்களுக்குச் சட்டெழுத்தாளர் உதவி கிடைக்காதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு தர்மத்தை உங்களிடம் கேட்கிறேன். ஏதாவது ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்கக் கூடாது என்பதற்காகவோ என்னவோ டைப்பிஸ்ட்களே இல்லாமல் செய்திருக்கிறார்களே, இது தர்மம்தானா, நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி விசாரிக்கப்படும். அதே நேரத்தில், நாளைக்கு முடித்துக் கொண்டு நிம்மதியாகச் செல்கிறோம், இனி எதுவும் இருக்காது என்ற எண்ணத்திலே இருந்தாலும் இருக்கலாம். இருந்தாலும்கூட அது தவறுதான், விசாரிக்கிறேன்.

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சை சரபோஜி கட்டிடம்.

*வினா எண் 844— திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பழைய சரபோஜி மன்னர் இருந்த கட்டிடம் இடிந்து விழுந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்படுத்தும் உத்தேசம் உண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) கடந்த நவம்பர் 1977 திங்களில் அடித்த புயலால் இளைய இளவரசர் குடியிருக்கும் சதுரமாடிக்கட்டிடத்தின் ஒரு பகுதி இடிந்தது ; மேற்கண்ட கட்டிடத்தை ரூ. 60,000 செலவில் சீர்படுத்தப்பட்டது. மேலும் மூத்த இளவரசர் குடியிருக்கும் கட்டிடத்தில் கூரை மழையினால் பாதிக்கப்பட்டது. அதனை ரூ. 23,000 செலவில் சீர்படுத்தப்பட்டது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தஞ்சை பழைய சரபோஜி மன்னர் இருந்த கட்டிடம் தஞ்சாவூர் சங்கீத மகால் நூல் நிலையத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இல்லாத அளவிற்கு அந்த நூல் நிலையம் அமைந்திருப்பதால் அங்கே வந்து போகிறார்கள். அதையொட்டி இருக்கிற, மன்னரால் அழகுப்படுத்தப்பட்ட கட்டிடம் மழையாலும், புயலாலும் சேதப்பட்டிருக்கிறது. அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் பதில் கூறும்போது 25,000 ரூபாய் செலவில் சீர்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அந்தத் தொகை போதாது. சுற்றுலாப் பயணிகள் வந்து சங்கீத மகாலைக் கண்டு செல்கிறார்கள். எனவே, தொல்பொருள் ஆராய்ச்சிக்காக வருபவர்கள் மகிழ்ச்சியாகத் திரும்பும் வகையில் அதைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 25,000 ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டது என்று கூறியதாகச் சொன்னார்கள். அப்படி இல்லை. இளைய அரசர் குடியிருக்கும் கட்டிடம், 60,000 ரூபாய் செலவிலும், பெரிய அரசர் குடியிருக்கும் கட்டிடம் 23,000 ரூபாய் செலவிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இப்பொழுது இரண்டு இளவரசர்களும் தங்கியிருக்கும் கட்டிடங்களை அரசு செலவில் சீர் செய்திருப்பதாகத் தெரிகிறது. அரசு இதைத் தொல்பொருள் இலாக்கா பொறுப்பிலே எடுத்துக் கொண்டு அரசாங்கமே அந்தக் கட்டிடத்தை நிர்வாகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா? அல்லது இளவரசர்களை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) : இக்கட்டிடங்களைப் பராமரிக்கப் பொதுப்பணித் துறை தலைப்பில் நிதி ஒதுக்கி பொதுப்பணித் துறை பதிவேட்டில் தான் இயங்கும்.